## ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்திச் செயற்திட்டம் - 2017

ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 ஒக்தோபர் 23 ஆந் திகதிய 5678 – எல்கே ஆம் இலக்க நிதியிடல் உடன்படிக்கையின் 02 ஆம் பட்டோலை, II ஆம் பிரிவு, சீ(3) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு மற்றும் பயிர்ச்செய்கை மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளது. ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்திச் செயற்திட்ட சேவைகளின் தரத்தினை முன்னேற்றுதல் மற்றும் சமமான அணுகுதலை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,250 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 50 மில்லியனாகக் காணப்பட்டதுடன் முழுத்தொகையினையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் வழங்குவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் செயற்பாடுகளினை 2016 பெப்ரவரி 16 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இவ் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இவ் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை

கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியிடல் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும், மற்றும்

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | நிதியிடல் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| ஐடீஏ | 50 | 7,250 | 750 | 522.86 | 638.83 |
| | **50** | **7,250** | **750** | **522.86** | **638.83** |

செயற்திட்டத்தின் செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது ரூபா 1,450 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 10 மில்லியன் செலவு செய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், மூலதன மற்றும் மீண்டெழும் செலவினத்தினை எதிர்கொள்ள மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பினூடாக ரூபா 750 மில்லியன் தொகையான ஒதுக்கீடு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வரிசை அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 523 மில்லியன் தொகையொன்று மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், வசதி முன்னேற்ற உதவியாக ஒவ்வொன்றும் ரூபா 300,000 நிதிசார் உதவிகளினை வழங்குவதற்கு செயற்திட்டத்தினால் 1,500 ஆரம்ப பிள்ளைப்பராய நிலையங்கள் தெளிவு செய்யப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1,375 ஆரம்ப பிள்ளைப்பராய நிலையங்களுக்கு ரூபா 202.69 மில்லியன் கூட்டுத்தொகையான முற்பணங்கள் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 20 ஆரம்ப பிள்ளைப்பருவ நிலையங்களின் வசதி முன்னேற்றங்கள் மாத்திரம் முன்னேற்றப்பட்டிருந்தது மேலும், ஆரம்ப பிள்ளைப்பராய 2,200 ஆசிரியர்களுக்கு நடாத்தப்பட வேண்டிய குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 284 ஆசிரியர்கள் மாத்திரம் பயிற்சியளிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) மேலும், 7,000 மாணவர்களுக்கான கட்டணத்தை தள்ளுபடி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள், 1800 ஆசிரியர்களுக்கான அவ்வப்போதைய உள்ளிணைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், பெற்றோர்க்கான 300 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்களாக மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்கு பட்டியல்படுத்தப்பட்ட செயற்பாடுகள் 2017 திசெம்பர் 31 இல் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்ட விளக்கங்களின் பிரகாரம், தொடர்புடைய பிரதேச செயலகங்களுக்கு நிதியினை அனுப்புவதற்கான பொறிமுறையொன்றின் அமுல்படுத்தலிலுள்ள தாமதங்கள் காரணமாக, தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் செயற்பாடுகளினை ஆரம்பிக்க முடியாதிருந்தது, எனத் தெரிவித்திருந்தார்.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெனிவெல்ல, சபுமல்கந்த, பனவத்த, திவெலகந்த மற்றும் அன்ஹெட்டிகமயிலுள்ள ஆரம்ப பிள்ளைப்பராய நிலையங்களின் புனர்நிர்மாணவேலைகள் குறிப்புரைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது கேகாலை மாவட்டத்தில் 2017 திசெம்பரில் நடாத்தப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பில் வெளிப்படுத்தப்பட்டது. ஆகையினால், புனர்நிர்மாண நோக்கங்களுக்கு தாழ்ந்த தரத்தினையுடைய சுகாதார பொருத்துக்கள் மற்றும் பலகைகள் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிர்மாண வேலைகளின் பூர்த்திக்கு முன்னர் கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலுள்ள தோட்டக் கம்பனிகளினால் முகாமை செய்யப்படும் தோட்டங்களில் அமைந்துள்ள 06 ஆரம்ப பிள்ளைப்பராய நிலையங்களுக்கு ரூபா 1.69 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு மூலப்பொருட்கள் , தளபாடம் மற்றும் சமையலறை பாத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது. பாதுகாப்பு நடவடிக்கைகளை கருத்திற்கொள்ளாது தோட்ட வளாகத்தில் தளபாடம் விளைவற்று தொடர்ந்தும் காணப்பட்டமை கணக்காய்வில் மேலும் அவதானிக்கப்பட்டது.

## 3.4 நிதிசார் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

------------------------------------------------------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்திற்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டிய 2017 ஆம் ஆண்டின் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் 2017 மார்ச் இல் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.